உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை :- திரு.ஆர்.மனோகரன்,எம்.ஏ.பி.எட்.,

ந.க.டி3/2416/2018 நாள் :- 26.12.2018.

பொருள் :- அனுமதியற்ற மனைப்பிரிவுகள்/மனைகள் - வரன்முறை முறைப்படுத்துதல் - உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம் - சோபனபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள - அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வரப்பெற்றது - விறகப்படாத மனைகள் 26-ஐ வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :- 1. திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் நக.எண். 3238/2018/தி.ம2,நாள் :- 29.10.2018.
2. திரு.ச.ராஜ்குமார், த/பெ.சங்கர், சோபனபுரம் என்பவரின் விண்ணப்பம் நாள் :- 09.11.2018
3. வளர்ச்சி கட்டணம் செலுத்திய ரசீது எண் 009540, நாள் 26.12.2018 மற்றும் கருவூலத்தில் வரன்முறைக் கட்டணம் செலுத்திய சலான் எண் 164 நாள் 24.12.2018

---

உத்தரவு :-

பார்வை1-இல் காணும் திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பச்சபெருமாள்பட்டி ஊராட்சியில் புல எண் 518/3 மற்றும் 518/4-ல் 1.24 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பரிவு வரன்முறைப்படுத்தி நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை2-இல் காணும் கடிதத்தில் விற்கப்படாத மனைகள் (பிளாட் எண்கள் 1,2,3,5-27) 26-க்கு வரன்முறை உத்தரவு கோரி விண்ணப்பம் செய்துள்ளதையடுத்து பார்வை 3இல் காணும் விவரப்படி வளர்ச்சிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் தனியரால் செலுத்தப்பட்டு சலான் நகல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதை ஏற்று பின்வரும் விவரப்படியான (வ.எண் 6ல் உள்ளவாறு) 26 மனைகளுக்கு மட்டும் வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. ஊராட்சியின் பெயர் | :- | சோபனபுரம் |
| 2. மொத்த மனைப்பிரிவின் பரப்பளவு | :- | 1.24 ஏக்கர் (54014.40 ச.அடி) |
| 3. புல எண்கள் | :- | 518/3 மற்றும் 518/4 |
| 4. விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | :- | 26 (மனை எண்கள் 1,2,3,5-27) |
| 5. விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | :- | 45804 ச.அடி (4256.88 ச.மீ) |
| 6. தற்போது வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படும் மனைகளின் எண்ணிக்கை | :- | 26 (மனை எண்கள் 1,2,3,5-27) |

## நிபந்தனைகள்

1. இந்த வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படும் மனையானது பார்வை1இல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களின் நிபந்தனைகளுக்கும், உத்தரவிற்கும் கட்டுப்பட்டதாகும்.
2. இந்த மனைகளுக்கு வழங்கப்படும் வரன்முறை உத்தரவு வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த மனைகளுக்கு வழங்கப்பட்ட வரன்முறை உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

26/12/18

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், உப்பிலியபுரம்.

26-12-18

Union-pc-eplot approval.docx

பெறுதல் :- திரு.ச.ராஜ்குமார்,
த/பெ.சங்கர்,
சோபனபுரம்.

நகல் :- ஊராட்சி செயலர், சோபனபுரம் ஊராட்சி.

நகல் :- நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் :- உதவி இயக்குநர் (ஊ), திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் :- சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம் , உப்பிலியபுரம்.

நகர் ஊரமைப்புத் துறை , உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு .ரா.நாகேஸ்வரன்,பி.இ,

நாள் .11.2018

ந.க.எண். 3238 /2018 திம 2

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017– 1.24 ஏக்கர் (54,014.40 ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக.

பார்வை
1. அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 4.5.2017.
2. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 13.10.2017.
3. அரசாணை எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண் .13193/2017/LA2 நாள் 30.10.2017 மற்றும் நாள் 07.11.2017.
5. மனுதாரர் திரு S.ராஜ்குமார், என்பவரின் இணையதள விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள்: 26.06.2018.

------

பார்வை 1, 2 மற்றும் 3–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 4–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை 5–ல் கண்ட மனுதாரின் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்கானும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிம், சோபனபுரம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள் . 518/3பாகம், 518/4பாகம் –ல் கட்டுபட்ட 1.24 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி இம்மனைப்பிரிவிற்கு **ம.வ(வ)/ந.ஊ.உ.இ(திம) எண். 758/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In Principle Approval) வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் பரப்பளவு – 1.24 ஏக்கர் (54,014.40 ச.அடி)
விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை – 01 எண்ணம்
(மனை எண்கள்: 4)
விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை – 26 எண்ணம்
(மனை எண்கள்: 1,2,3,5–27)
விற்கப்படாத மனைகளின் மொத்தப்பரப்பு – 45,804 ச.அடி
திறவெளி ஒதுக்கீடு (OSR)இடத்தின் பரப்பு– 4,699 ச.அடி (10.02 %)
ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை – 27 எண்ணம்
(மனை எண்கள்: 1–27)

செலுத்தப்படவேண்டிய கட்டண விபரம்:

**<u>1).பரிசீலணைக்கட்டணம் :</u>**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500 வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1–3,5–27 |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணைய தளம் மூலம் செலுத்த வேண்டும்.

**<u>2). வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:</u>**

| மனை எண்கள்: | வரன்முறைப்படுத்தும் கட்டணம் | வளர்ச்சிக் கட்டணம் |
|---|---|---|
| 1–27 | ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம் வசூலிக்கப்படவேண்டும் | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் வசூலிக்கப்படவேண்டும் |

மேற்காண் வரண்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**<u>அ) வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:</u>**

| | |
|---|---|
| 0217 Urban Development – 60 Other Urban Development Schemes- 800 Other receipts AT Receipt under Regularisation Charges of Unapproved layout and Plots-DTCP 27 Non Taxation fees – 30 Regularisation (DPC:0217 60 800 AT 2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம் |

ஆ). வளர்ச்சிக்கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காண் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தபட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப் பட வேண்டும். விற்கப்படாத மனைகளை பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–இல் கண்ட அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறுகட்டணம் ஏதும் உள்ளாட்சியால் வசூலித்தல் கூடாது.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4(3) நாள் 13.10.2017 –ல் விதி எண்.7 (g) (ii)–ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியாணவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்படட் கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்.

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் : 2 நகல்கள்

பெறுநர்
தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்,
உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம்,
உப்பிலியபுரம்.

நகல்
1. திரு S.ராஜ்குமார்,
139, முத்துகங்காணி தெரு,
சோபனபுரம்,
துறையூர்,
திருச்சி – 621012.

2.தொழில்நுட்ப வைப்பறை–1.

3.உதவி இயக்குநர்( நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி. — சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு

4.சார்பதிவாளர்
உப்பிலியபுரம் சார்பதிவகம்
உப்பிலியபுரம். — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.